உ

பதிவு எண் — M. 5720 வெள்ளிக் கிழமையில் குருகுலத் தாள்

# முல்லைக்கொடி

கிழமை வெளியீடு:- சான்றாண்மை இதழ்.

ஆசிரியர்: இளவழகனார்.

5-கிளை தநுதலம், மாம்பாக்கம்; நந்தன, மாசி; 13—3—53 தளிர்-24

குருகுலத்தின் குறிக்கோள் :

பொதுமறை விளக்கம்—திருவள்ளுவர் தெரிவிப்பது

## அன்பின் இன்பம்

அரிய இன்பம் 'அன்பினால்' என்பது! எத்தனையோ வழிகளில் வாழ்க்கையின்பம் அடைய மக்கள் முயல்கின்றனர்; ஆனால், அன்பினால் வருவதே தூய இன்பமாகும்; ஏனை வழிகளால் வருவன போலி இன்பங்களே; அதாவது இன்பம் போன்ற துன்பங்கள்.

சிறப்பு நெறி, அன்பு நெறிதான்; அதாவது பிறர் ஆக்கத்துக்காக உள்ள நெகிழ்வு கொள்ளுதல். இதனால், அகமார ஓர் இன்பம் பிறக்கின்றது; பகை இல்லாமையாலும் இணக்கம் உண்டாகையாலும் சூழலும் இன்ப வண்ணமாய் அமைந்து வருகின்றது; இந் நெறியினால் புகழும் மிகுந்து, இன்பம் பெருக்கி வருகின்றது; தமக்கேயன்றித் தம்மவர் பலர் உள்ளத்துக்கும் பிறர்க்கும் இன்பம் எந்நாளும் ஊற்றெடுத்து நிற்கின்றது.

இவ்வாறு,பல வகையாலும் இன்ப ஊற்றுக்குக் காரணமாய்ச் சிறந்து நிற்பது அன்பு நடையாகவே இருக்கக் காண்கின்றோம். உண்மை இன்பம் பயக்கும் வேறு நடையைக் காண்பது அரிது.

அன்பினால் இன்புற்றவர்க்கே அதனால் ஒரு சிறப்பும் உண்டாகின்றது. அல்லாத நெறியால் ஏதோ இன்பம்போல் ஒன்று கொள்வார்க்கு இழிவையல்லது சிறப்புண்டாகவில்லை; இம்மையிலுமில்லை, மறுமையிலுமில்லை.

ஆதலால், வையகத்தில் இன்புற்றார் எய்தும் சிறப்புக்குக் காரணம் அன்புற்று அமர்ந்த நடையையல்லது வேறில்லை என்பது தெளிவு; எனவே, வையகத்து இன்பமுறுவோர் அதற்கு ஏதுவாக மேற்கொள்ளும் சிறப்பொழுக்கமும் அன்புற்றமர்ந்த நடையே என்னும் மற்றொரு நுண்மையும் இனிது புலப்படும்.

அன்பைப் பொருந்தி அதில் நிலைபெற்றுப் பழகி இன்பம் அடையத் தெரிந்துகொண்ட பின்னரன்றே அதனால் வரும் புகழ்க்கும் இடம்! ஆதலால், அன்பினால் இன்பமாகும் வாழ்க்கை நடையை அறிந்து நடந்து தமக்கும் உலகுக்கும் இன்பச் சூழலை உண்டாக்கிக் கொள்ளுதல் நல்லது! பின்பு, எல்லாம் எல்லார்க்கும் எப்போதும் உண்டாதல் திண்ணம்!

அன்புற் றமர்ந்த வழக்கென்ப
வையகத்து
இன்புற்றா ரெய்தும் சிறப்பு

வையகத்து இன்புற்றார் எய்தும் சிறப்பு – உலகத்தில் இன்பங் கொள்வோர் அதற்கு ஏதுவாகப் பொருந்தும் சிறப்பு நடை, அன்பு உற்று அமர்ந்த வழக்கு – அன்பைப் பொருந்தி நிலைத்த நடைமுறையே, என்ப – என்று உயர்ந்தோர் சொல்வர்.

அன்பைப் பொருந்தினோர் அதனில் நிலைபெற்றொழுக வேண்டுதலின், 'அமர்ந்த' என்றும், அவ்வொழுக்கத்திலும் பழக்க வழக்கம் ஏற வேண்டுதலின் 'வழக்கு' என்றும் கூறினார். பிறர் கருத்தும் இது என்றற்கு 'என்ப' என்றார்.

நேரிற் காணத்தக்கது என்பார் 'வையகத்து' என்றார். இன்பமுறுதல் திண்ணமாதலின், 'இன்புற்றார்' என இறந்த காலத்தில் வந்தது. சிறப்பு, இங்கே காரணப் பொருளாய்ப் பொருந்திற்று; சிறந்த நடையை உணர்த்தி நிற்றலால், ஆகுபெயர்; அன்பொழுக்கம், 'சிறப்'பென்றே குறிக்கப்பட்டது.

அன்பொழுக்கத்தால் இன்பம் அடைக என்பது கருத்து.

"முல்லைக் கொடி"

(செந்தமிழ்க் கிழமை வெளியீடு)
**5-ம் ஆண்டுக் கையொப்பம்**
**(3-10-52 முதல்)**

| | | | | |
|---|---|---|---|---|
| உள் நாடு | ரூ. 4 | 0 | 0 |
| வெளி நாடு | ரூ. 6 | 0 | 0 |
| தனித் தாள் | 0 | 1 | 0 |
| ஆயுள்— கையொப்பம் | ரூ. 100 | 0 | 0 |

விற்பனையாளர்கள், தேவைக்கு முன்பணத்துடன் எழுதுக.

முகவரி :—

குருகுலம், மாம்பாக்கம்,
மதுராந்தகம் P. O.
(தென் இந்தியா)

"யாதும் ஊரே, யாவரும் கேளிர்;
தீதும் நன்றும் பிறர்தர வாரா."
—புறநானூறு.

| கிளை | நந்தன, மாசி, | தளிர் |
|---|---|---|
| 5 | 13-3-53 வெள்ளி | 24 |

# இன்றைத் தமிழ்

விரிநீர் உலகத்து வியத்தகு மொழித் தொகுதியுள் தமிழ் சிறப்புடைத் தெனின், பொருந்தும். இன்பம் என்னும் கருத்துடைய அந்தப் பெயரினலேயே அதன் சிறப்புக்குரிய காரணம் ஓரளவு அறியப் பெறும்.

அந்த இனிமை சொல்லளவு மட்டில் நில்லாது. எண்ணுந்தோறும் இன்பம் உள்ளத்தில் ஊறிக்கொண்டே இருக்கும்.

இன்று அதன் நிலை கெட்டது மக்கள் வாழ்க்கை கெட்டு, பன்மொழிக்கலப்பு ஏற்றதனலேயே; மக்கள் வாழ்க்கை கெட்டு நாடும் கெட்டதின் விளைவால் மொழித்தரங் குன்றியது. புதிய அச்சு இயந்திரத்தின் உதவியால் சரியாகத் தமிழை அறியாதவரும் தமக்குள்ள பொருட் செல்வாக்கைப் பயன்படுத்திப் புகழைக் கருதி, மொழிக் கொலைவையும் நோக்காது, பலபட எழுதுகின்றனர்; அச்சமின்றி மக்களிடையே கொணர்ந்து நீட்டுகின்றர்.

ஒரு நாட்டின் முன்னேற்றத்திற்கு முதன்மை, தாய் மொழி! அம்மொழி நாட்டு மக்களால் எந்த அளவில் மதிக்கப்படுகிறதோ, அந்த அளவிலேயே நாட்டு முன்னேற்றம் இருக்கும். இதை நம்மவர்கள் சிந்திக்க வேண்டும்.

சிறந்த இலக்கண இலக்கிய நிகண்டுகளை அறியாதிருக்கலாம்; சிறந்த முறையில் பேச்சு—எழுத்துவன்மை பெறுதிருக்கலாம், தவறில்லை; ஆனல் பெற்ற அளவிலேனும், நலமுறப் பிழையறப் பெற்றிருத்தல் வேண்டுமன்றோ?

சிறந்த உண்மைகளைத் தன்னகத்துக் கொண்டு விளங்கும் பழந் தமிழ்ப் பாட்டுக்கள் நமக்கு உள்ளன. அவைகளின் காலத்தில் உரைநடை மிகுதியாக இல்லை. தமிழ் மக்களின் மொழியறிவுத் திறம் மிகுதியாக இருந்தது. அக் காலத்தவரின் செந்தமிழ்ப் பேச்சுக்குத் தென்பாண்டி நாட்டிலும் இலங்கை யாழ்ப்பாணத்திலும் அறியலாம்.

இன்று சங்ககாலக் கல்வி பலருக்கும் கிடைக்கும்படி சங்க நூல்கள் வெளிவந்தன. அக் கல்வி பரவுங் காலங் கிட்டியவுடன் அந்தோ! தமிழின் தரம் குன்றிவிட்டது. கெடும் முன்பே எல்லோரும் கற்க நேர்ந்திருந்தால், இங்ஙனம் பொருள் தெரியாது திகைத்து ஆர்வமெல்லாம் பொங்கி வேறுவழியில் திரும்பாமல் தடுத்திருக்கலாம்.

வடமொழி, ஆங்கிலம் போன்ற பிற மொழிக் கலப்புண்டாக்கி மொழி சிதைவுபட்டு இன்று மக்களிடையே செந்தமிழ் பலர்க்குக் கொடுந்தமிழாகி விட்டது. எளிய நூல்கள் எங்கும் விரவித் தமிழின் தரத்தையே குறைத்துத் தமிழுக்கும் தமிழர்க்கும், நாட்டுக்கும் இழிவைத் தேடித் தந்திருக்கிறது. இதன் உண்மையுணராது, குறையைச் சார்ந்து, பின்னும் கெட நேர்ந்தது.

இக் குறைபாடு எழும் முன்பே தடுத்து நிறுத்தியிருக்கலாம். வல்லாரால் இயலவில்லையென்பதைவிட, அக் குறைபாட்டைச் சரியாக உணரவில்லை எனலாம். அங்ஙனம் பிறமொழிக் கலப்புகள் தமிழில் இலகுவாகப் புகுந்துகொண்டன.

ஏற்பட்டிருக்கும் இழுக்கைப் போக்கித் தூய்மை செய்யும் வழியை யோராது ஒரு சாரார் பின்னும் கலப்பு பெருமைபடத் தக்கது என்கின்றனர் "பட்டகாலிலேயே படும்" என்பதும் இம் மொழியின் பொன்மொழியே. தனக்கு ஏற்பட இருக்கும் துயர்களைக் கருதியே அங்ஙனம் கூறியது போலும்!

இனி, தமிழென்னுஞ் சொல்லுக்கு வேறு பொருள் காண வேண்டியதே. ஏற்கெனவே ஏற்பட்டிருக்கும் கலப்பால் படும் வேதனையைத் தூண்டி அதிலே வேலைப் பாய்ச்சுதல் போன்றுள்ளது இக் கூற்று.

பிறநாட்டு நாகரிகம், வேண்டாத பழக்க வழக்கங்கள் பரவியதே இதற்குக் காரணம் எனலாம். அவை சிறந்தன அல்ல என்றாலும், பிற மொழிச்சொல் தமிழிலில்லாக் காரணத்தினல்

தான் எடுத்தாள்கிறோம். அச்சொற்கள் தமிழ் மொழியில் இல்லை எனின், பிறமொழிக் கலப்பால் தமிழுக்குத் தனிச் சிறப்பும் மதிப்பும் ஏற்பட்டுவிடுமா? மொழி, வளர்ச்சியடையப் புதுச் சொற்கள் உண்டாக்கல் வேண்டும்.

பன்மொழிப் புலவர்களை மிகுதியும் பெற்றுள்ள தமிழகம் புதுச் சொற்களை உண்டாக்க வல்லதன்றோ? கால தேய வர்த்தமானங்களைத் தழுவிப் பிற புதுப் பொருள்களுக்குத் தகுந்த சொற்களை உண்டாக்கல் வேண்டும்.

மெய்ஞ்ஞானத்தில் வல்ல தமிழர் அதற்கேற்ற சொற்களைப் பெருக்கிக் கொண்ட போது தற்காலத்தில் ஏற்பட்டிருக்கும் விஞ்ஞானத்துக் கேற்ற புதிய சொற்களை அவர் உண்டாக்க வல்லாரே! ஞானிகள் விஞ்ஞானமும் வல்லவரே; கணக்கற்ற நம் தமிழ் ஞானியர்கள் அறிஞர்கள் புலவர்களின் உதவியைக் கொண்டு புதுச் சொற்களை உண்டாக்குவோம்.

அறிவு வளர்ச்சி வேண்டுமெனின் புறத்தேயுள்ள நட்சத்திரம், மின்சாரம், ஒளி, ஒலி, இயக்கம் இவைகளைத் தெரிந்தால் மட்டும் பயன்தராது. அவை புற வளர்ச்சிக்கேயாம். உண்மையறிவு வளர, மெய்ஞ்ஞானமும் வேண்டும்.

நம் நாட்டவர் அகத்தோடு புறமும் ஒன்றி இயங்கப் பாடுபட்டனர். அதன் விளைவால் உலக சமாதானத்தை நாட்டினர். அத்தகைய பெரியர்களின் துணை, மிகுந்த அளவு பெற்றுள்ளோம்; நாம் கண்ணற்றவராக நிற்கின்றோம்; முடவாராகவும் இருக்கின்றோம்.

நிற்க, பிறிதொரு சாரார், தமிழ் தமிழ் என்று சொல்லித் தமிழிலேயும் கடவுள் பக்தியிலேயும் மூழ்கி, உலகப் போக்கை அறியாதவராய் நிற்கின்றனர் எனத் தமிழைக் குறை கூறுகின்றனர்; அதனால் பிறநாட்டைப் போல் நம் நாடு உயரவில்லை என மேற்கோள் காட்டுகின்றனர்.

அகப்புற வளர்ச்சிக்குள்ள ஒற்றுமை அறியாது, புறத்தாக்கும் ஒவ்வாத கருத்தைப் பிடித்துத் தொங்கல் போன்று இருக்கிறது அக் கேள்வி. வானவூர்தியிலே ஒருவர் மட்டும் பறந்துவிடுவதனால் நாடு முன்னேற்றம் அடைந்து விடவில்லை; ஒருவர் நூற்பு இயந்திரச் சாலையை வைத்துவிடுவதனால் எல்லாரும் ஒரே விதமான உடையை உடுத்துகிறார்களில்லை.

நாட்டின் தன்மையை ஆராய வேண்டும். இவ்விரண்டினையும் பலவிதத்திலும் சீர் தூக்கிப், பின் இவைகளின் தன்மைகளைச் சரியான கண் கொண்டு நோக்க வேண்டும்.

அன்று, மக்கள் சூழ்நிலை வசதிக்கேற்ப, நாகரிகம் இரண்டு விதத்திலும் சம அளவில் ஓங்கியிருந்தது. இன்றும் அந் நிலையையே காணவேண்டும்.

அங்ஙனம் பிற நாட்டோடு ஒக்க வளரவில்லையாயின், வளர முயலவேண்டும்; மொழி வளர, கண்டபடி எண்ணி இயம்பி எழுதி மொழியையும் மக்களையும் பொருந்தாத நெறிக்கு இருத்தல் கூடாது.

மக்களின் வாழ்க்கைக்கு மிகக் கட்டாயமானவைகளை நாமும் புதிது புதிதாக உண்டாக்கலாம். ஆனால் அது இடம் காலம் கருதி வசதிகளைச் சரிக்கட்டி, அதன் பயன், ஒரு சாரார்க்குச் சென்று குவியாமல் நாட்டு மக்கள் அனைவருக்கும் பயன்படும் வகையில் செய்தல்வேண்டும் அதற்குச் சிறு சிறு பயிற்சிகளின் மூலம் மக்களின் மனப்பான்மை சமநிலையில் ஓங்கவேண்டும். தற்காலம் நாம் பிற நாட்டுப் பொருள்களை அளவறிந்து பயன்படுத்தி, நம் வரையறையில் இயங்கி, உலகத்தோடு நல்லுறவு பூண வேண்டும்.

நம்முடைய மொழி பிற மொழிக் கலப்பினின்றும் விடுபட்டு, எல்லோர் நாவிலும் பயிலும் செந்தமிழாய் எளிய இனிய நடையில் உலவவேண்டும். பிற மொழிச் சொற்களுக்கும் புதிதாகத் தமிழில் சொற்கள் பெருக வேண்டும். தமிழிலுள்ள நூல்களை இயற்றமிழ் வகைகளை, எல்லாருக்கும் விளங்கும்படி எழுதிப் பரப்ப வேண்டும். மொழியின் சிறப்பு வளர, பிற நாடு அறிய, எல்லாரும் குழந்தை முதல் பெரியவர்கள் வரை, பிற நாட்டுக்குச் சென்றிருக்கும் பெருமக்கள் உட்படத் தமிழில் அன்புடையவராகச் செய்தல்வேண்டும். தமிழ் முழக்கம் வானை எட்டவேண்டும்.

அதன் பின்னரே, அனை குறையாளர்கள் நிறைவு பெற்றுத், தமிழர் வாழ்க்கை ஓரளவு நிறைவு பெறமுடியும்.

—நாராயணசாமி.

Telegrams: "RAMBROS"

N. Ramu Bros;

GENERAL HARDWARE

MERCHANTS

AVANASHI ROAD,

COIMBATORE.

# கலைத் துறை

## * நோக்கம் இல்லையா? *

(ஆடலரசு)

கடந்த சனிக்கிழமை (28-2-53) யன்று மாலை நல்ல விரிவுரைகளைக் கூடக் கேட்காமல் நண்பர் ஒருவர் விரும்பியபடி சென்னைக் கடற்கரைப்பக்கம் போக நேர்ந்தது. வழக்கத்துக்கு மேல் உயர்நீதிமன்றப் பகுதியில் ஆயிரக்கணக்கில் மக்கள் குழுமியிருந்தனர். அன்று மாசிமகம் என்று தெரியுமாயினும் அவ்வளவு கூட்டம் திரண்டிருக்கும் என்று சிறிதும் நினைக்கவேயில்லை. அங்குள்ள சாலை எங்கும் மக்கள் திரளும், பழம் தேங்காய் கற்பூரம் தின்பண்டம் குழந்தைகள் விளையாட்டுப் பொருள் கடைகளும், சுழலும் இராட்டினங்களும் தண்ணீர்ப் பந்தல்களும் நிரம்பி இருந்தன. குடும்பம் குடும்பமாகவும், தனித்தனியாகவும் ஆண்களும் பெண்களும் இளைஞர்களும் சிறுவர்களும் குழுமியிருந்தனர். அவர்களிடத்துக் காணப்பட்ட தெம்பும், புன்சிரிப்பும் கலகலப்பும் எவருடைய உள்ளத்தையும் கொள்ளை கொள்ளக் கூடியவையாக இருந்தன.

மாசிமக நாளில் திருக்கோயில்களில் உள்ள விழாத் திருவுருவங்களைக் கடற்கரை, ஆற்றங்கரை, ஏரிக்கரை முதலிய இயற்கை இடங்களுக்குக் கொண்டுபோய் அங்கே திருமுழுக்கும், வழிபாடும், சிறந்த திருக்கோலமும் செய்து வழிபட்டு மீண்டும் திருக்கோயிலுக்குக் கொணர்தல் என்ற ஒரு வழக்கத்தை ஏற்படுத்திய பெரியோர்கள் எவ்வளவு பொதுநல நோக்கமும் வாழ்க்கையைப் பற்றிய நுட்ப அறிவும் உடையவர்கள் என்பது இத்தகைய விழாக்களை நல்ல கண்ணோடு நோக்குகிறபோது தெரியாமற் போகாது.

ஆடி ஆவணி முதல் மார்கழி தை வரை மழைக்காலமாயும் பனிக் காலமாயும் உள்ள நிலை மாறி வெயிற்காலம் தொடங்குகிறபோது நல்ல நிலவு நாளில் மாலைக்காலத்தில் அதுகாறும் வீட்டுக்குள்ளேயே அடைபட்டுக் கிடந்த மக்களைத் தெய்வ நாட்டத்தோடு இயற்கை இடங்களுக்குப் போகுமாறு செய்வது எவ்வளவு நல்லது? இதில் வாழ்க்கை நோக்கமில்லை என்று சொல்லமுடியுமா? அன்று கடற்கரையில் கூடிய ஆயிரக் கணக்கான மக்களுக்கும் வாழ்வில் எத்தனையோ கவலைகளும், அல்லல்களும் இருக்கத்தான் இருக்கும். ஆனாலும் அவைகளை எல்லாம் மறந்து அந்த வேளையில் அவர்கள் இயற்கையன்னையின் மடியில் இனிய தென்றலின் தாலாட்டுதலில், குளிர்ந்த நிலவொளியில் தெய்வ நினைவோடு கூடிமகிழ்வது, வாழ்க்கையை எவ்வளவு சுவையுடையதாக ஆக்கியிருக்கும்?

ஒரு பெரிய கூட்டத்தைக் கூட்டச் சிறந்த வசதிமிக்க நாளில் எவ்வளவு விளம்பரமும் பிறவும் செய்கிறோம். செய்தாலும் சில சமயங்களில் எதிர்பார்க்கிற அளவு கூட்டம் சேருவதுமில்லை, சேர்ந்தாலும் சேர்கிற மக்களுக்கு இன்றியமையாது தேவைப்படும் வசதிகளை எண்ணிப்பார்த்துப் பெரும்பாலோர் செய்வதுமில்லை, செய்விப்பதுமில்லை. அப்படியிருக்க, யாதொரு சிறு விளம்பரமும் இல்லாத நிலையில், ஆயிரக் கணக்கான மக்கள் (50 ஆயிரத்துக்குக் குறையாது அன்றைய கூட்டம்) குறிப்பிட்ட நாளில் குறிப்பிட்ட இடத்தில் சேருமாறு பெரியோர்கள் செய்து, நூற்றுக்கணக்கான ஆண்டுகள் அது வழக்கமாகி, அதனால் நல்ல விளம்பரத்தையும் எளிதாகப் பெற்றுவரும் இத்தகைய நிகழ்ச்சிகள் எவ்வளவு மகிழ்ச்சியைத் தருகின்றன! வாழ்க்கையில் ஏற்படக் கூடிய வறட்சியுணர்வை மாற்றும் இன்ப ஊற்றுக்கள் போன்ற இவ் விழாக்கள் எத்துணை மக்களுக்கு உடலுக்கும் உயிருக்கும் எளிய செலவில் நன்மை செய்யத்தக்க நல் ஏற்பாடுகளாக இருக்கின்றன! இவ்விழாக்களை வீண் செலவு எனக் கண்டிப்பது எந்த வகையில் நன்மையாகும்! வேண்டுமானால் இந்த நிகழ்ச்சிகளைத் திருத்தமான முறையில், மக்கள் நல்ல அறிவு பெறும் வகையில் நடத்திப், பெரும் செலவில் மாநாடுகள் நடத்திப் பெறக்

கூடிய பயனை மக்கள் பெறுமாறு செய்யலாமே!

நிற்க, மாசி மகத்தன்று மக்கள் ஆயிரக்கணக்கில் கூடுவார்கள். அவர்களில் பலருக்கு, நீரும் மோரும் சிற்றுண்டியும் சுவைநீரும் பிறவும் தேவைப்படும் என அறிந்து, தருட்டுத் தனமாகவோ எப்படியோ வேண்டுதல் (பிரார்த்தனை)கள் செய்து கொண்டு அவ்விழாவில நேர்த் தொடர்பில்லாத பலர் அவ்வவ்வூர்களின் நிலைக்கேற்பக் கடற்கரையிலும் ஆற்றங்கரையிலும் தண்ணீர்ப் பந்தலும் பிறவும் வைக்கும்படி யனமந்த நல்லுணர்வை எப்படிப் போற்றுவது?

முன்னோர் வழக்கங்களை மாற்றிப் புதிய முறையில் ஆயிரக் கணக்கான ஏழை எளிய குடும்பங்களை, எந்நேரமும் தம் வாழ்க்கை அல்லல்களிலேயே மூழ்கிக் கிடப்பதிலிருந்து கரை ஏற்றுவதுபோல், இவ்வாறு இயற்கைச் சூழல்களிலே சேர்த்து மகிழவைப்பது என்றால் முடிகிற செயலா? முடிந்தாலும் அதற்கு எவ்வளவு செலவும் விளம்பரமும் முயற்சியும் செய்ய வேண்டியிருக்கும்?........

எனவே, எளிதாக முன்னோர்களின் பழக்க வழக்கங்களைக் கண்டிப்பதும் அவைகளை ஒதுக்கிவிட முயல்வதும் நல்லதல்ல என்று உணரவேண்டும். அவற்றின் பலன்களைப் பலமுகமாக அலசி ஆராய்ந்தும் அறிஞர்களைக் கேட்டும் அறிந்து, கூடுமானால் அவற்றையே இக்காலத்துக்கு ஏற்ற வகைகளில் அளவாகத் திருத்தியும் மாற்றியும் பின்னும் சிறப்புறச் செய்யவே முயலவேண்டும்.

நம் நாட்டுப் பெரியோர்களின் சமயக் கொள்கை பழக்கங்களும், பலவகைகளில் மறுமையோடு இம்மை வாழ்க்கை நலங்களையும் சிறப்பாகப் போற்றுவனவாகவே தென்படுகின்றன. அல்லாதவைகளுக்கு மாற்றம் வேண்டுவதுதான். அதற்கும், மொத்தமாகக் கடவுள் உணர்வே அதன் தொடர்பான செயல்கள் எல்லாமே வாழ்க்கை நோக்கமற்றன என்று சொல்வதற்கும் வேறுபாடு இருக்கிறதல்லவா? பழைமையைப் பழிப்பது பகுத்தறிவாய் விடுமா? அதனை நன்கு ஆராய்ந்து ஏற்றவைகளைப் போற்றுவதே பகுத்தறிவாகும்.

# மொழித் துறை

## * இடுக்கணழியாமை *

[திரு. R. கோவிந்தாசன் B. A.]

"இடுக்கண் வருங்கால்
நகுக, அதனை
அடுத்தூர்வது அஃதொப்ப தில்".

"வெள்ளத் தனைய இடும்பை
அறிவுடையான்
உள்ளத்தின் உள்ளக் கெடும்".

இன்பமும் துன்பமும் கலந்ததே நம் வாழ்க்கை என்றாலும், இன்பத்திற்கு மகிழ்வதுபோல் துன்பத்தைத் தாங்க மக்களால் முடிவதில்லை. அதற்குக் காரணம், அவர்கள் அறியாமையேயாகும். வினை செய்யும்பொழுது தெய்வத்தாலோ, வறுமையாலோ, மெய் வருத்தத்தாலோ இடுக்கண் வந்தால் அதற்கு அழியாமல் அதை வெல்வதற்கான உபாயத்தைத் திருவள்ளுவர் மேற்கண்ட இரண்டு குறட்பாக்களில் நமக்கு விளக்கிக் காட்டுகிறார்.

இடுக்கண் வரும் பொழுது அதைக் கண்டு நாம் உள் மகிழ வேண்டும். பரிமேலழகர் உட்படத் திருக்குறள் உரையாசிரியர்கள் பலரும் நகுதல் என்பதற்கு மகிழ்தல் என்றே பொருள் கொண்டார்கள். வினை முடிந்துழி நிகழற்பாலதாகிய மகிழ்ச்சியை அதற்கிடையே இடுக்கண் வருவழிச் செய்ய வேண்டும் என்பது பரிமேலழகரின் கருத்து. துன்பம் என்றால் நம் உள்ளம் நடுங்குகிறது. உள்ளத்தோடு நம் உடம்பும் நடுங்குகிறது. அந்நடுக்கத்தால் நமக்கு அறிவு மயக்கம் உண்டாகிறதேயன்றி மகிழ்ச்சி உண்டாகிறதில்லை. அப்படியானால், இடும்பையைக் கண்டு நாம் நகுவதெப்படி? தீரத்தால் நகைக்கவேண்டும். இத் தீர நகையின் தன்மையைச் சீவக சிந்தாமணி ஆசிரியர் திருத்தக்க தேவர்,

"இடுக்கண் வந்துற்றகாலை
எரிகின்ற விளக்குப்போல
நடுக்கமொன்றானு மின்றி நகுக"

என்ற ஒரு செய்யுளடிகளால் விளக்குகிறார். காற்றினால் விளக்குச் சுடர் நடுங்குவதைப்

போல் இடுக்கணால் நம் உள்ள மும் உடலும் நடுங்கும் என்ற உண்மையை உணர்ந்தே அவ்வா சிரியர் நடுக்கத்தை விட்டு நாம் நீர நகை செய்யவேண்டும் என்கிறார். நீரநகைக்கு எரிகின்ற விளக்கை அவர் உவமைகாட்டி னார். அவ்வுவமைநயம் நாம் ஆராய்ந்து ,இன்புறுதற் குரியது. 'எரிகின்ற விளக்கு' என்றமை யால் அதன் சுடுந் தன்மையும், ஒளிவிடுந் தன்மையும் புலனாகின் றன. பிறருக்கு ஒளியைத் தரும் விளக்கொளி தனக்காதாரமா யுள்ள திரியை எரித்தெழுவ தாகும். திரி எரிய, விளக்கு ஒளி வீசுகிறது. அதைப்போலவே இடுக்கண் தீயால் நம் உள்ளமா கிய திரி வேகுமாயினும் விளக் கொளியைப் போல நாமும் நீர நகை செய்து நிற்கலாம் என்பது திருத்தக்க தேவரின் கருத்து. பொய்யா மொழியின் கருத்தும் அதுவேயாம்.

இடும்பையை மாற்றுவதற்கு அந் நகைபோன்ற வேறு உபா யம் எதுவுமில்லை என்று முதற் குறளில் கூறிய திருவள்ளுவர், இரண்டாம் குறளில், அறிவுடை யவன் தன்னுள்ளத்தான் நினைக, வெள்ளம் போன்ற இடும்பையும் கெட்டொழியும் என்கிறார். எதை நினைக்கவேண் டும்? என்ற வினா, தானாக எழுகிறது. இடும்பைக்குக் காரணமாகிய வினையை நினைக்க வேண்டும் என்று குறள் உரை யாசிரியர்கள் பலர் கூறுகின் றனர். பரிமேலழகர் ஒருவரே 'உள்ளத்தின் உள்ள' என்பதற்கு 'உள்ளத்தான் ஒன்றனை நினைக்க' எனப் பதவுரை கூறி, இடும்பை யாவது உள்ளத்து ஒரு கோட்பா டேயன்றிப் பிறிதில்லை என்பதும் அது மாறுபடக் கொள்ள நீங்கு மென்பதும் அறிதல் வேண்டு தலின் 'அறிவுடையான்' என்றார் என்ற விளக்கவுரையையும் நமக்கு உதவியுள்ளார்.

பரிமேலழகர் கொள்கைக் கேற்ப, கி. பி. இரண்டாம் நூற் றாண்டில் ஆட்சி புரிந்த உரோ மாபுரி மன்னரும் பேரறிஞரு மான மார்க்கஸ் அரிலியஸ் (**Marcus Aurelius**) இடும்பை யைப்பற்றித் தன்னுள்ளத்தான் எவ்வாறு நினைத்தார் என்பதை அவர் கருத்தோவியங்களில் (**Meditations**) ஒன்றன் மூலம் நாம் அறியலாம். அதன் மொழி பெயர்ப்பு இதனடியில் தரப்பட் டுள்ளது. மொழிபெயர்ப்பு எத் தன்மையதாயினும் மார்க்கஸ் அரிலியஸின் கருத்துக்களை வாச கர்கள் தம் மனதில் இருத்தி, இடுக்கண் வருங்கால் அதை அவர் காட்டிய உபாயத்தாற் களைந்து, இன்புறுவார்களாக!

"ஒரு கற்பாறையைப் போல் உறுதியாயிருக்கும் பாறையின் மேல் அலைகள் மோதினாலும் மோதிமோதிக் கடைசியில் அவ்வலைகள் ஓய வேண்டுமே யொழியப் பாறை அசைவற்றுத் தான் நிற்கும். இவ் வெதிர்பா ராத நிகழ்ச்சி என்னை எவ்வளவு துன்பத்திற்காளாக்கிய தென்று ஒருவன் கதறுகிறான். அது சரி யன்று.

இவ் வேளை யாதொரு கவலையின்றி, தற்போதைய நிகழ்ச்சியால் மனமுடைந்து தளராமல்,இனி வருவதைப்பற்றி யும் அஞ்சாத யானன்றோ இனியன் என்று அவன் சொல்லிக்கொள்ளவேண்டும். எனக்கு நேர்ந்த இத் துன்பம் வேறொருவனுக்கும் நேர்ந்திருக் கும். ஆனால், ஒவ்வொருவனும் என்னைப்போல் அதைப் பொறுத் துக் கவலையற்றிருக்க முடி யாது.

அவ்வாறாயின், துன்பத்தைப் பொறுக்கும் நல்வாய்ப்பு, அத் துன்ப நிகழ்ச்சியாகும் தீய வாய்ப்பை விடச் சிறந்ததல்லவா? அல்லது, ஒழுங்காகக் கூறின், தன் மனிதத் தன்மைக்கு ஊறு செய்யாத ஒன்று, ஒரு மனிதனுக் கெப்படி துன்பமாகக் கூடும்? இயற்கையின் விருப்பத்திற்கும், திட்டத்திற்கும் மாறுபடாதது மனிதத்தன்மைக்கு எப்படி மாறா கக் கூடும்? குறித்த நிகழ்ச்சியால் இயற்கையின் விருப்பம் என்ன வென்பது உனக்குத் தெரியும்.

இவ்வாராய்ச்சியைக் கொண்டு பார்த்தால், அந் நிகழ்ச்சி, நேர் மையோடும், பெருந்தன்மை யோடும், அமைதி அடக்கங்க ளோடும், நடுவு நிலைமையோடும், உண்மையோடும், மரியாதை யோடும், அடிமைப் புத்தி இல் லாமலும் நீ நடந்து கொள் வதைத் தடுக்கிறதா? ஒரு மனித னுக்கு இந் நற்பண்புகளெல்லாம் ஒருங்கே அமையும்பொழுது அவன் தன்மை இயற்கையை ஒத்ததாகிறது.

இதற்குமேலும் கூற வேண்டு மாயின், ஏதாவதொன்று இடும்பையாய்க் காணப் பட்டால், இக் கருத்தை உன் ஞாபகத்திற்குக் கொண்டுவா: இந் நிகழ்ச்சி ஒரு துன்பமாகாது; அதை நன்கு பொறுத்துக் கொள்வதே அதை ஆக்கமான தாக மாற்றிவிடும்."

:—o—:

# * சைவ குரவர் *

## பன்னிரு திருமுறை யாசிரியர்

### இருபத் தெழுவர்

1. திருஞானசம்பந்தர்
2. வாகீசர் (திருநாவுக் கரசர்)
3. சுந்தரர்
4. திருவாதவூரர் (மாணிக்கவாசகர்)
5. திருமாளிகைத் தேவர்
6. சேந்தனர்
7. கருவூரர்
8. பூந்துருத்தி நம்பி
9. கண்டராதித்தர்
10. வேணுட்டடிகள்
11. திருவாலியமுதர்
12. புருடோத்தமர்
13. சேதிராயர்
14. திருமூலர்
15. திருவாலவாயார்
16. காரைக் காலம்மை
17. ஐயடிகள் காடவர்கோன்
18. சேரமான்பெருமான்
19. நக்கீரர்
20. கல்லாடர்
21. கபிலர்
22. பரணர்
23. இளம்பெருமான்
24. அதிராவடிகளார்
25. பட்டினத்தடிகள்
26. நம்பியாண்டார்நம்பி
27. சேக்கிழார்

---

இதற்குச் செய்யுள்:-

திருஞான சப்பந்தர் வாகீசர் சுந்தரர்
திருவாதவூரர் மற்றைத்
திருமாளி கைத்தேவர், சேந்தனர் கருவூரர்
தெள்ளுபூந் துருத்தி நம்பி
வருஞான கண்டரா தித்தர்வே ணுட்டடிகள்
வாய்ந்ததிரு வாலி யமுதர்
மருவுபுரு டோத்தமர் சேதிரா யர்மூலர்
மன்னுதிரு வால வாயார்
ஒருகாரைக் காலம்மை ஐயடிகள் சேரமான்
ஒளிர்கீரர் கல்லா டர்தாம்
ஒண்கபிலர் பரணர்மெய் யுணரிளம் பெருமானு
டோங்குமதி ராவடிகளார்
திருமேவு பட்டினத் தடிகளொடு நம்பியாண்
டார்நம்பி சேக்கி ழாரும்
சிவநெறித் திருமுறைகள் பன்னிரண் டருள்செய்த
தெய்விகத் தன்மை யோரே.

—:○●○:—

(8-ம் பக்கம் தொடர்ச்சி)

றளித் தெருவின் இடையில் தென்புறமாக ஒதுங்கி இருக்கிறது. சிறிய அக் கோயிலை ஒட்டிய வீட்டிலிருக்கும் அக்கமணி பூண்ட திரு. நடராசன் என்னும் தேவார இளைஞர், எங்களை முன்னுளே பார்த்தாராதலின் எங்கள் வரவை எதிர்பார்த்துக்கொண் டிருந்தார். எங்களில் சிலரைத் தம் வீட்டுக்கு அழைத்துச் சென்று இன்னுரை கூறி வசதிகள் செய்வித்து மேலே கூறிய திருஞானசம்பந்தர் கோயிலுக்கும் சிவன் கோயில்களுக்கும் எங்களை அழைத்துச் சென்று வழிபடச் செய்வித்தார்.

(வரும்)


நஞ்சன்கூடு பல்பொடி
பாக்டெரியாரின்




யுனைடெட் கன்ஸர்ன்,
54; பந்தர்த் தெரு, :: சென்னை-1

# யாம்கண்ட நல்லோர்

(முன் தொடர்ச்சி)

சென்னைக்குச் சென்ற ஆசிரியரவர்கள் 23-6-52 திங்கட்கிழமை காலையில் புறப்பட்டு 9 மணிக்குள் காஞ்சி வந்து சேர்ந்து விட்டார்கள். அதற்குள் காலைக் கடமைகளை முடித்துக் கொண்டு நாங்கள் அமைவாக (தயாராக) இருந்தோம்.

சைவத்திருவாளர் கதிர்வேல் முதலியார் அவர்கள் திரு. சம்பந்தம் என்னும் தேவாரம் பாடும் இளைஞர் ஒருவரை எங்களுடன் கூட்டித் திருக்கச்சி நெறிக் காரைக்காட்டிற்கு அனுப்பிவைத்தார்கள்.

காஞ்சிபுரத்தின் கீழ்க்கோடியில், நகரத்துக்குச் சிறிது தள்ளி உள்ள அக்கோயில், எழெட்டு ஆண்டுகளுக்கு முன்பே திருப்பணி செய்யப்பட்டு அழகாக ஆனால் திருக்குடமுழுக்குச் செய்யப்படாமல் இருக்கிறது. ஒருகாலத்தில் அது ஏகாம்பரநாதர் கோயிலையும் விடப் பெரியதாக எழு திரு மதில்களுடன் இருந்ததாகவும் காலப்போக்கில் அழிந்து இப்போதைய சிறிய அளவுக்கு வந்து விட்டதாகவும் அங்கிருந்த குருக்கள் சொன்னார். அதற்குரிய சில அடையாளங்களும் அங்கே காணப்பட்டன. பக்கத்தில் பாழ்பட்டுப்போன மிகப் பெரிய திருக்குளமும் இருக்கிறது. ஒரு மடுவைப் போல் இருந்த அதன் நீரில் முழுகி வழிபாடு செய்தோம்.

உடன்போந்த திரு. சம்பந்தம் உருத்திராக்கத் தாழ்வடம் பூண்டு தாளத்துடன் சிவப்பொலிவாக இருந்து, அத்திருப்பதியின் பதிக முழுவதையும் இசையோடு ஓதிக்கொண்டு வர, நாங்கள் திருக்கோயிலை வலம் வந்து மகிழ்ந்தோம்.

அங்கிருந்து புறப்பட்டபோது ஞாயிறு உச்சியைத் தாண்டி விட்டது. இடையில் ஒரு விடுதியில் உணவு கொண்டு ஓய்ந்து தேவாரப்பாடசாலையை அடைந்தோம்.

திருமேற்றளியில்: (23-6-52)

மாலையில் 5 மணிக்குப் புறப்பட்டுப் பிள்ளையார் பாளையத்தில் உள்ள திருமேற்றளிக்குச் சென்றோம். ஆளுடையபிள்ளையார் அடியார்களுடன் வந்து தங்கிய இடமாதலின் அதற்குப் 'பிள்ளையார் பாளையம்' என்று பெயர் வழங்குகிறது. அங்கே மேற்படி திருமேற்றளிக்கோயிலுக்கு எதிரில், தெருவின் மற்றொரு கோடியில் 'சாலத்தெரு' என்னும் தெரு கூடும் இடத்தில் திருஞானசம்பந்தர் திருக்கோயில் ஒன்று இருக்கிறது. அதன் எதிரில் ஒரு பெரியமேடை (இப்போது சிறு பூங்காப்போல் ஆக்கிவிட்டனர்) இருக்கிறது. அம்மேடையில்தான் பிள்ளையார் பாளையத்தில் உள்ள செங்குந்த குல மக்களின் ஊர்ப் பொதுக் கூட்டம் நடப்பது வழக்கம்.

திருமேற்றளி என்பது திருமால் தளி என்பதன் திரிபு என்றும், முன்னர் அவ்விடத்தில் திருமால் கோயில்கொண்டிருந்தார் என்றும், திருஞானசம்பந்தர் பாடலைக் கேட்டு உருகி அவர் "சிவ சாரூப்பிய" நிலையைப் பெற்றுச் சிவலிங்கமாய் விட்டார் என்றும் சொல்லுகின்றனர். கோயில் சற்றுப் பெரிதாகவே இருக்கிறது. கிழக்கு நோக்கிய திருமுன்னிலையுடைய சிறு கோயில் ஒன்றும் இருக்கிறது. அதுதான் திருமேற்றளி என்றும் கூறுகின்றனர்.

ஆளுடைய பிள்ளையார் அங்கே வந்து பாடியபோது, உற்றுக் கேட்டதால், 'உற்றுக் கேட்ட ஈசுரர்' என்று பெயர் பெற்றார், என்று சொல்லப் பெறும் சிவன் கோயில் ஒன்றும், திருமேற்

(தொடர்ச்சி 7-ம் பக்கம்)

PHONE 55034 TEL.ENKAYAM
கைத்தறி ஆடைகளில்
சிறந்தது எங்கள்
கிசான் டிரேட்மார்க்


பட்டாடைகளுக்கும்
நூலாடைகளுக்கும்
சிறந்த இடம்
கருப்பண முதலியார் ஸ்டோர்ஸ்
53 கிடங்குத்தெரு சென்னை 1.